சுருக்கம்

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை – நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் முதன்மை இயக்குநர் ஆகியோருக்கு சென்னை – 25 கிண்டியில் உள்ள தர உறுதி (ம) ஆராய்ச்சி அலுவலக கட்டட வளாகத்தில் ஒருங்கிணைந்த அலுவலர் குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.எப்.1) துறை

அரசாணை (நிலை) எண்: 150 நாள்: 28–09–2013

புரட்டாசி, 12, திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்க:

தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை கடித எண். 9781/திட்டம்/2013, நாள் 26–06–2013.

------

ஆணை:-

நெடுஞ்சாலைத்துறையின் "அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும் ஒருங்கிணைந்த குடியிருப்பு கட்டடம் ரூ.6.00 கோடி மதிப்பில் சென்னை, கிண்டியில் உள்ள தரஉறுதி மற்றும் ஆராய்ச்சி அலுவலக வளாகத்தில் இவ்வாண்டில் கட்டப்படும்" என்று மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களால் 2013–14ம் ஆண்டுக்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது சட்ட மன்ற பேரவையில் அறிவிக்கப்பட்டது.

2. அதன்படி, தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை அவர்கள், தமது கருத்துருவில், நெடுஞ்சாலைத்துறையில் 7 தலைமைப் பொறியாளர்கள் முதன்மை இயக்குநரின் தலைமையில் இயங்கி வருகிறார்கள், என்றும் துறையின் அனைத்து பணிகளையும் சீரிய முறையில் செவ்வனே நிறைவேற்றிடவும், இயற்கை இடர்பாடு நேரும் காலங்களில் அனைத்து அலகுகளின் செயல்பாட்டினையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தவும் தலைமைப் பொறியாளர்களின் குடியிருப்பு ஒரே இடத்தில் அமைவது அவசியமாகிறது என்றும், இதற்கான போதிய இடவசதியும், சுற்றுச்சூழலும் தற்சமயம் அரசின் ஒப்புதல் பெற்று ஒருங்கிணைந்த அலுவலக கட்டடம் கட்டப்பட்டு வரும் நெடுஞ்சாலைத்துறையின் தர உறுதி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ளது என்றும், நெடுஞ்சாலைத்துறையின் தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), அவர்கள் தெரிவித்துள்ளார்.

3. மேலும், நெடுஞ்சாலைத்துறையின் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் முதன்மை இயக்குநர் ஆகியோருக்கு கிண்டி, தர உறுதி மற்றும் ஆராய்ச்சி அலுவலக வளாகத்தில் ஒரு குடியிருப்புக்கு 169.00 சதுர மீட்டர் பரப்பளவில் தரைதளம் மற்றும் 135.00 சதுர மீட்டர் பரப்பளவில் முதல்தளம் என மொத்தம் 304.00 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டடமும் 20.00 சதுர

மீட்டர் பரப்பளவில் போர்டிகோ அமைக்கவும், திட்டமிடப்பட்டுள்ளது என்றும், இவ்வாறு அமையவிருக்கும் 8 குடியிருப்புகளின், கட்டடங்களை சுற்றி இணைப்புச்சாலைகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என தெரிவித்து, நெடுஞ்சாலைத் துறையின் அனைத்து தலைமைப் பொறியாளர்கள் மற்றும் முதன்மை இயக்குநருக்கு ஒருங்கிணைந்த குடியிருப்பு வளாகம் ரூ.6.00 கோடி மதிப்பில் கட்ட அரசின் நிர்வாக ஒப்புதலை பெற்றுத்தருமாறு நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), அவர்கள் அரசை கோரியுள்ளார்.

4. மேலே, பத்தி 3ல் கண்டுள்ள நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), அவர்களின் கருத்துருவினை ஏற்று நெடுஞ்சாலைத் துறையை சார்ந்த முதன்மை இயக்குநர் உள்ளிட்ட அனைத்து தலைமைப் பொறியாளர்களுக்கும் கிண்டி, தர உறுதி மற்றும் ஆராய்ச்சி அலுவலக வளாகத்தில் சென்னை மாவட்ட, மாம்பலம் – கிண்டி தாலுக்கா, வெங்கடாபுரம் கிராமம், ச.எண்.20,21,24,25,26,27 மற்றும் 28 பிளாக் எண்.5–ல், ரூ.6.00 கோடி (ரூபாய் ஆறு கோடி மட்டும்) மதிப்பீட்டில் 169.00 ச.மீ பரப்பளவில் தரைதளம் மற்றும் 135.00 ச.மீ. பரப்பளவில் முதல்தளம் என மொத்தம் 304.00 ச.மீ பரப்பளவில் கட்டடமும் 20.00 ச.மீ. பரப்பளவில் போர்டிகோ என மொத்தம் 8 குடியிருப்புகள் கட்டுவதற்கும், மற்றும் கட்டடங்களைச் சுற்றி இணைப்பு சாலைகள் அமைக்கவும், நிர்வாக அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேற்கண்ட செலவினம் கோரிக்கை எண். 21–03ன் கீழ் துவங்கப்பட்டுள்ள புதிய கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"4216– வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு–80–பொது – 800– ஏனைய செலவு – II – மாநிலத்திட்டம்– பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–KB– நெடுஞ்சாலைத்துறை – வீட்டு வசதிதிட்டங்கள் –16– பெரும்பணிகள்.
(த.தொ.கு. 4216-80-800- KB-1605)

6. மேற்காணும் கணக்குத் தலைப்பிற்கு தலைமைப் பொறியாளர் (கட்மானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை அவர்கள் மதிப்பீடு, ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலர் ஆவார். மேற்காணும் புதிய கணக்குத் தலைப்பினை உரிய பதிவேடுகளில் பராமரிக்கும் பொருட்டு பதியப்படவேண்டுமாய் சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுப்பணிகள் (New Service)" குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு பொது–I)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு–செலவு பொது–I)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலும் இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில், பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும்

செலவினம் ஆகிய விவரங்கள் உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (பொதுப்பணி -1) துறைக்கு அனுப்புமாறும் தலைமைப் பொறியாளர் (கட்மானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.49141/பொ.ப.I/2013, நாள்28-09-2013-ல் பெறப்பட்ட இசைவின்படியும், மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1410 (ஆயிரத்து நானூற்று பத்து) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு),
நெடுஞ்சாலைத் துறை, சென்னை-600005.
மாநிலக் கணக்காயர், சென்னை - 18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை-600008.

நகல்:-

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-600009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள்)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-600009.
முதன்மை செயலாளர், நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை
அவர்களின் தனிச் செயலர், சென்னை-600009.
நிதி (பொ.ப.I/வ.செ.பொ.I/வ.செ.பொ.II) துறை, சென்னை-600009.
கோ. எண். 5300/எச்.எப்1/2013
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்